(Under Section.173 BNSS)

FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(குற்ற வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109483

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் VGAC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 09/2025/AC/CB Date: நாள் 25.05.202

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988, as amended by the prevention of Corruption Act 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 25.05.2025 Date to : நாள் வரை 25.05.2025

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 05.35hrs Time to : நேரம் வரை 17.00hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.05.2025 Time : நேரம் 21.00hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.05.2025 Time : நேரம் 21.00hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil (computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் RTO checkpost Kaniyur (Out going) Coimbatore Attabau 25 km north west.

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்

District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. pandian

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Arumugam

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 50yrs

(d) Nationality : நாட்டினம் Indian

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Inspection Cell Inspector

(g) Address : முகவரி District Inspection Cell office Collectorate campus Coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. C. Sathish Jayachandran MVI (non technical) Kaniyur Checkpost outgoing RTO checkpost.
2. Loganathan, Assistant, RTO checkpost Kaniyur Coimbatore

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No - delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/05/2025.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

D. SHEELA.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 29.05.2025

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....

Inspector of police
Vigilance and Anti Currpti
Coimbatore.

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/2025/AC/CB **u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...**

இன்று 28.05.2025-ம் தேதி 21.00 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர், திரு.A.பாண்டியன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/2025/AC/CB u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 21.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புனர், திரு. A.பாண்டியன், ஆய்வுக்குழு ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.165/2025/ஐ1, நாள்: 28.05.2025 அம்மா, பொருள்: திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிசெல்கை) - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்மந்தமாக. கோவை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரியும் நான் கோயம்புத்தூர் மாவட்டம் கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடியில் (வெளிச்செல்கை) பணிபுரியும் அலுவலர்கள் அந்த சோதனை சாவடியை கடந்து செல்லக்கூடிய வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்தும், கிளீனர்களிடமிருந்தும் வாகன வரி வசூல் செய்வதற்காகவும், தற்காலிக உரிமம் வழங்குவதற்காகவும், E-Way Bill மற்றும் Trip Sheet, ஆகியவற்றை சரிபார்த்து அவைகளில் சோதனைச்சாவடி சீல் வைக்கவும்,

வாகனங்களை தணிக்கை செய்யாமல் இருக்கவும் கையூட்டாக பணம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் கோவை மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தினை 28.05.2025 ஆம் தேதி காலை சுமார் 05.35 மணி அளவில் கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ஷீலா மற்றும் காவல் குழுவினர்களுடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரங்கள் தெரிய வந்தது. கோவை மாவட்டம், கந்தே கவுண்டன் சாவடி, போக்குவரத்து துறை சோதனை சாவடி (வெளிச்செல்கை) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பமல்லாத) திருமதி.C.சதீஷ் ஜெயசந்திரன் என்பவரும், உதவியாளராக திரு.G.லோகநாதன் என்பவரும், அலுவலக உதவியாளராக திரு.சம்பத் என்பவரும் 27.05.2025 ஆம் தேதி இரவு 08.00 மணி முதல் பணியில் இருந்தது தெரியவந்தது. மேற்படி திடீர் தணிக்கையின் போது சோதனைச்சாவடி கோவை - பாலக்காடு கிழக்கு மேற்காக செல்லும் பிராதான சாலையில் தென்புறத்தில் வடக்கு பார்த்த நுழைவுவாயிலுடன் கூடிய கான்கிரீட் கட்டிடத்தில் அமைந்துள்ளது. மேற்படி சோதனைச்சாவடி அலுவலகத்தின் முன்புறம் இருந்த இரண்டு நபர்கள் சோதனை சாவடிக்கு முன்பாக உள்ள நான்குவழி சாலையில் சோதனைசாவடியை கடந்து செல்லும் வாகனங்களை நிறுத்தி அதன் ஓட்டுனர்களை சோதனை சாவடிக்குள் செல்லுமாறு சைகை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களிடம் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் நான் என்னையும் என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.D.ஷீலா மற்றும் சோதனைக்குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு திடீர் தணிக்கைக்காக வந்துள்ள விபரம் தெரிவித்து அவர்களைப்பற்றி விசாரிக்க அதில் ஒருவர் பெயர் K.S.பீர்முகமது என்றும், தான் கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை (வெளிச்செல்கை) சோதனைசாவடியில் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக தனிநபராக (Private Individual) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளாகள் (தொழில் நுட்பம் அல்லாத) அவர்கள் சொல்லும் பணிகளை செய்துவருவதாகவும்

தெரிவித்தார். மேலும் அவரிடம் உள்ள பணத்தைபற்றி விசாரிக்க ரூ.950/-எடுத்து ஆஜர் செய்தார், அந்த பணம் அவரது சொந்த பணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதேபோல் மற்றொரு நபரை விசாரிக்க அவர் பெயர் திரு.ஹரீஷ் என்றும், தான் கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை (வெளிச்செல்கை) சோதனைசாவடியில் கடந்த 6-மாதங்களாக தனிநபராக (Private Individual) அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் (தொழில்நுட்பமல்லாத) சொல்லும் பணிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் உள்ள பணத்தை பற்றி விசாரிக்க அவரிடமிருந்த பணம் ரூ.820/-எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரது சொந்தபணம் என்று சொன்னதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர்கள், கேரளா நோக்கி செல்லும் அனைத்து வாகனங்கள் உரிய வரிகள் செலுத்தியுள்ளார்களா என்பதை சரிபார்க்க வாகனங்களை நிறுத்தி உரிய ஆவணங்களுடன் சோதனை சாவடியின் அதிகாரியிடம் அனுப்பிவைப்பது தங்களது வேலை எனவும் தெரிவித்தார்கள். பின்னர் அந்த நபரை அழைத்துக்கொண்டு சோதனைச்சாவடிக்குள் சென்று கொண்டிருந்தபோது சோதனை சாவடியின் நுழைவாயிலுக்கு அருகில் கையில் ஆவணங்களுடன் Counter முன் நின்று கொண்டிருந்த 4 நபர்களிடம் ஆய்வுக்குழு ஆய்வாளர் நான் என்னையும் என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.D.ஷீலா மற்றும் சோதனைக்குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு விசாரித்தபோது அவர்கள் அவரவர் வாகனத்தின் ஆவணங்களை காண்பித்து பணம் கொடுத்து முத்திரை பெறுவதற்காக நின்றிருக்கும் விபரத்தை தெரிவித்தனர். எனவே மேற்படி நபர்களையும் விசாரிப்பதற்காக இந்த போக்குவரத்துதுறை சோதனைச் சாவடிக்குள்ளே அழைத்து வந்து அமரவைக்கப்பட்டது. சோதனைசாவடிக்குள் நுழைந்தவுடன் பிரதான ஹால் ஒன்று உள்ளது. இந்த பிரதான ஹாலுக்கு கிழபுறம் மேற்கு பார்த்த ஓய்வு அறையும், அதன் உள்ளே செல்லும்போது வடக்குபார்த்த ஒரு ஓய்வறையும் அதனை அடுத்து வடக்குபார்த்த கழிவறையும் உள்ளது. மேலும் இந்த பிரதான ஹாலின் தென்புறம் வடக்குப்பார்த்த மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையும்

அமைந்துள்ளது. பிரதான ஹாலின் தென்மேற்கு மூலையில் நுழைவுவாயில் உள்ள ஒரு கணினி அறையும், அதையடுத்து உணவு அருந்தும் அறையும், அதனையடுத்து கழிவறையும் உள்ளது. கணினி அறைக்கு தென்புறம் இரண்டு பதிவறைகள் வடக்குபார்த்து அமைந்துள்ளன. சோதனை சாவடிக்குள் பிரதான ஹாலில் உள்ள E-way bill மற்றும் Trip sheet-களுக்கு சீல் வைக்கும் கவுன்டருக்கு எதிரில் இருந்த இருக்கைக்கு அருகில் காக்கி சீருடையுடன் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் நான் என்னையும் என்னுடன் வந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.D.ஷீலா மற்றும் சோதனைக் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு திடீர் தணிக்கை செய்யவந்துள்ள விபரத்தை தெரிவித்தும் தங்களை சுயபரிசோதனை செய்து தங்களிடம் பணம் ஏதும் இல்லை என்பதை உறுதிபடுத்திய பின்னர் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி காக்கி சீருடை அணிந்து நின்று கொண்டிருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் திரு.C.சதீஷ் ஜெயசந்திரன் என்றும் மோட்டார் வாகன ஆய்வாளராக (தொழில்நுட்பமல்லாத) கடந்த 19.02.2025-ம் தேதி முதல் கந்தே கவுண்டன் சாவடி போக்குவரத்து துறை (வெளிச்செல்கை) சோதனைசாவடியில் பணிபுரிந்து வருவதாகவும் சீல் வைப்பதற்காக நின்று கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் நேற்று 27.05.2025-ம் தேதி இரவு 8.00 மணி முதல் 28.05.2025ஆம் தேதி காலை 8.00 மணிவரை சுழற்சி முறையில் பணியில் தானும் உதவியாளர் திரு.G.லோகநாதன் மற்றும் திரு.சம்பத், அலுவலக உதவியாளர் ஆகியோர்களும் பணியில் இருந்ததாகவும். திரு.சம்பத், அலுவலக உதவியாளர் என்பவர் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின், துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களின் விசாரணைக்காக செல்லவேண்டுமென அனுமதி வேண்டி மனு சமர்பித்ததின்பேரில் அவரை 28.05.2025 அதிகாலை சுமார் 02.00 மணியளவில் பணியிலிருந்து விடுவித்து, மேற்படி விசாரணைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் அலுவலகத்தின் சமையல் அறையின் அருகில் நின்று கொண்டிருந்த நபரைபற்றி விசாரிக்க அவர்தனது பெயர் சரவணன் என்றும், தான் இந்த அலுவலகத்தில்

மோட்டார் வாகன ஆய்வாளர்களின் உத்தரவுபடி அலுவலகப்பணிகளுக்கும் மற்றும் இதர பணிகளுக்கும் உதவியாக இருப்பதாக தெரிவித்தார். இதற்காக தனக்கு தினந்தோறும் கூலியாக ரூ.500/-தருவதாகவும் தெரிவித்தார். மேலும் அவரை விசாரிக்க அவர் தன்னிடம் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் ரூ.970/-எடுத்து ஆஜர் செய்தார். அதனை அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.சதீஷ் ஜெயசந்திரன் அவர்களிடம் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேடு பற்றி விசாரிக்க அவர் அதை எடுத்து ஆஜர் செய்தார். அதை பார்வையிட்டதில் 27.05.2025 இரவு பணிக்கு வரும்போது தான் ரூ.360/- கொண்டு வந்ததாகவும், உதவியாளர் திரு.G.லோகநாதன் ரூ.200/- கொண்டு வந்துள்ளதாகவும், அலுவலக உதவியாளர் திரு.B.R.சம்பத் ரூ.500/- கொண்டுவந்துள்ளதாகவும் பதிவு செய்து கையொப்பம் செய்திருந்தனர். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.சதீஷ் ஜெயசந்திரன் அவர்களிடம் மேற்படி பணம் பற்றி விசாரிக்க அந்த பணம் அவரது சொந்த பணம் என்றும், அவர் தனது செலவு போக மீதி இருந்த ரூ.300/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரிடமே திருப்பிகொடுக்கப்பட்டது. அதனை தொடர்ந்து உதவியாளர் திரு.G.லோகநாதன் அவர்களின் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேட்டில் ரூ.200/- பதியபட்டிருந்ததை பற்றி விசாரிக்க அவர் இன்று காலை தனது சொந்த செலவுக்காக கொண்டு வந்த பணம் என்று சொன்னதால் அந்தப்பணம் ரூ.200/-ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அலுவலக உதவியாளராக பணிபுரியும் திரு.சம்பத் அவர்களின் பணியாளர்கள் கையிருப்பு பணப்பதிவேட்டில் ரூ.500/-பதியபட்டிருந்ததை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர்(தொழில்நுட்பமில்லாத) அவர்களிடம் விசாரிக்க அதற்கு அவர் இன்று 28.05.2025 கிருஷ்ணகிரி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் விசாரணை உள்ளதால் அதிகாலை சுமார் 02.00 மணியளவில் உத்தரவு படி அனுப்பிவைக்கப்பட்டதாக தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து E-way Bill மற்றும் Trip Sheet-களுக்கு சீல் வைக்கும் கவுண்டருக்கு எதிரில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.சதீஷ் ஜெயசந்திரன் அவர்கள் நின்று கொண்டிருந்த

இருக்கைக்கு முன் இடதுபுற மர ஷெல்பினை சோதனை செய்து பார்த்தபோது, அதில் ஐநூறு, இருநூறு மற்றும் நூறு, ரூபாய் நோட்டுகளாக தனித்தனியான கத்தைகளாக கிளிப் போட்டு வைக்கப்பட்டிருந்தது, அதனை எடுத்து எண்ணிபார்க்க அதில் மொத்தம் ரூ.30,500/- இருந்த்து. அதன் விபரம் பின்வருமாறு ரூ.500X41=20,500/-, ரூ.200X21=4200/-, ரூ.100X58=5,800/- ஆகும். மேலும் அதன் அருகில் இருந்த முத்திரை வைக்கும் மர மேசையின் கீழ்பகுதியை சோதனை செய்தபோது, அதன் கீழ் ஷெல்பில் வைக்கப்பட்டிருந்த தொகையை எடுத்து எண்ணிபார்க்க அதில் ரூ.500X14=7,000/-, ரூ.200X12=2400/-, ரூ.100X54=5,400/- ரூ.50X40=2,000/-, ரூ.20X10=200/- மற்றும் ரூ.10X6=60/- ஆகமொத்தம் ரூ.17,060/- இருந்தது. மேற்படி ரூ.30,500/- மற்றும் ரூ.17,060/- ஆகிய தொகைகளை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர்(தொழில்நுட்பம் அல்லாத) விசாரிக்க அவர் மேற்படி தொகையானது தமிழ்நாட்டின் எல்லையை கடந்து கேரளா பகுதிக்கு செல்லும் அனைத்து வாகனங்களுக்கும் ஆதாரமாக வைக்கப்படும் முத்திரைக்காக அதன் ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடம் இருந்து ரூ.50/- முதல் ரூ.500/- வரை வாங்குவது வழக்கம் என்றும், அந்த வகையில் நேற்று இரவு 8.00 மணிக்கு தான் அலுவலுக்கு ஆஜரானது முதல் சோதனைக்குழுவினர் வரும் வரை பெறப்பட்ட மாமூல் பணம் தான் இத்தொகை என்றும் தெரிவித்தார். மேற்படி தொகை ரூ.30,500/- மற்றும் ரூ.17,060/- ஆகிய தொகைகளை விசாரணைக்காக கைபற்றப்பட்டது. அலுவலகத்தின் தெற்கு பகுதியில் இருந்த அறையை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.சதீஷ் ஜெயசந்திரன் அவர்களிடம் விசாரித்தபோது அந்த அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஆகிய நாங்கள் அமரக்கூடிய அறையாகும் என்று தெரிவித்தார். அந்த அறையில் இருந்த மர மேஜை, பீரோ, கணினி மேசை ஆகியவற்றை சோதனை செய்து பார்த்த போது, அந்த அறையில் எந்தவித பணமோ, பொருட்களோ கைப்பற்றப்படவில்லை. மேலும் அலுவலகத்தின் வடக்குப்பார்தவாறு அமைந்திருந்த Store Room-யை சோதனை செய்தபோது அந்த அறையின் தென்கிழக்கு பகுதியில் போடப்பட்டிருந்த டேபிள் மேல் கணினி மற்றும்

பிரின்டர்கள் வைக்கப்பட்டிருந்தது. அதில் HP மாடல் பிரின்டரை திறந்து சோதனை செய்தபோது அதில் ஐநூறு ரூபாய் நோட்டுகள் இரண்டு கத்தைகளாக தனித்தனியாக வைக்கப்பட்டிருந்தது, அதனை எடுத்து எண்ணிபார்க்க ரூ.500X100=50,000/-, ரூ.500X100=50,000/- அதில் ஆக மொத்தம் ரூ.1,00,000/- இருந்தது. மேற்படி மொத்த பணத்தை பற்றி திரு.C.சதீஷ் ஜெயசந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர்(தொழில்நுட்பம் அல்லாத) அவர்களிடம் கேட்க அவர் மேற்படி தொகையானது தமிழ்நாட்டின் எல்லையை கடந்து கேரளா பகுதிக்கு செல்லும் அனைத்து வாகனங்களுக்கும் ஆதாரமாக வைக்கப்படும் முத்திரைக்காக அதன் ஓட்டுநர்கள் மற்றும் கிளீனர்களிடம் இருந்து ரூ.50/- முதல் ரூ.500/- வரை வாங்குவது வழக்கம் என்றும், அந்த வகையில் நேற்று இரவு 8.00 மணிக்கு தான் அலுவலுக்கு ஆஜரானது முதல் சோதனைக்குழுவினர் வரும் வரை பெறப்பட்ட மாமூல் பணம் தான் இத்தொகை என்றும் தெரிவித்தார். மேலும் அவ்வாறு பணிநாளில் மாமூலாக பெற்ற பணத்தில் தனக்கு 50%-ம், உதவியாளர் திரு.G.லோகநாதன் 25%-ம், அலுவலக உதவியாளர் திரு.சம்பத் 25%-ம் என்று பிரித்துகொள்வோம் என்று தெரிவித்தார். மேற்படி மாமூல் பணம் என்று மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. C.சதீஷ் ஜெயசந்திரன் அவர்கள் தெரிவித்த தொகை ரூ.1,00,000/-த்தை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து இச்சோதனைச் சாவடியில் வசூலிக்கப்பட்ட வேறு தொகை பற்றி விசாரிக்க உதவியாளர் திரு.G.லோகநாதன் சோதனைச்சாவடியை கடந்து செல்லும் வாகனங்களுக்கு தற்காலிக பர்மிட் மற்றும் வாகனத்திற்கு வரி போடுவதற்காக வரும் நபர்களிடமிருந்து பணம் வசூல் செய்து இரசீது போட்டு கொடுப்பது தனது வேலை எனவும் அது சம்மந்தமான விபரங்கள் பிரதானஹாலின் மேற்கு புறம் இருந்த கணினி அறையிலிருக்கும் கணினியிலும், இவ்வலுவலக பதிவேடுகளிலும் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிவித்து மேற்படி அறைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்த டேபிள் டிராயரை திறந்து பார்த்தபோது ரூபாய் நோட்டுகள் இருந்தன. அதை எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.20,300/- இருந்தது. அந்த தொகையை பற்றி லோகநாதன் அவர்களை கேட்டபோது நேற்று 27.05.2025-

ம் தேதி இரவு 08.00 மணி முதல் சோதனைக்குழுவினர் வந்தடைந்தது வரை தற்காலிக பர்மிட் மற்றும் வாகனத்திற்கு வரி மற்றும் அபராதமாக வசூலிக்கப்பட்ட மொத்த அரசு கட்டணம் என்று தெரிவித்தார். மேற்படி தொகை குறித்து இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த வாகன தணிக்கை பதிவேடு, தினசரி கணக்கு பதிவேடு மற்றும் கணினி பதிவுகளை ஒப்பிட்டு சரிபார்த்த போது மேற்படி வசூல் செய்யப்பட்ட தொகையானது சரியாக இருந்ததால் அத்தொகையான ரூ.20,300/-ஐ அவரிடமே என் முன்னிலையிலும் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் முன்னிலையிலும் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அலுவலத்தில் சோதனை சாவடி சம்பந்தமான பணிகளுக்கு தனிநபர்களான திரு.மணிமாறன்(எ)சரவணன் என்பவர் அலுவலகத்தில் உள்ள பணிகளுக்கும் மற்றும் இதர பணிகளுக்கும் உதவியாக கடந்த 2-வருடங்களுக்கு மேலாக இருந்து வருவதால், அவருக்கு கூலியாக ரூ.500/-தினந்தோறும் கொடுப்பது வழக்கம். மற்ற தனி நபர்களான திரு.பீர் முகமது மற்றும் திரு.ஹரீஷ் ஆகியோர்கள் சோதனைச்சாவடியை கடந்து செல்லும் வாகனங்களை நிறுத்தி ஆவணங்களை சோதனைச்சாவடியில் காண்பிக்க அனுப்பிவைக்கும் பணிகளையும், இதர பணிகளையும் கடந்த 2-வருடங்களாக, திரு.பீர் முகமது அவர்களும் மற்றும் திரு.ஹரீஷ் அவர்கள் 6-மாதங்களாகவும் பணிபுரிந்து வருகிறார்கள், ஆகிய இருவருக்கும் கூலியாக தலா ரூ.500/-தினந்தோறும் கொடுப்பது வழக்கம். மேலும் காலை 08.00 மணிக்கு மேற்படி அலுவலர்கள் சுழற்சி பணி முடித்து ஒப்படைக்கும்போது கையிருப்பு தொகையினை (1) 28.05.2025-ம் தேதியிட்ட தினசரி கணக்கு பதிவேட்டின் வ.எண்.64ல் குறிப்பிட்டிருந்த ரூ.4,000/- ஐ சரிபார்த்த பக்கத்தின் நகல், (2) Government of Tamilnadu, Transport Department, e-Receipt–Chassis No.MB1A5HCD0SRMG0023–க்கு Rs.9,700/- (3) Government of Tamilnadu, Transport Department, e-Receipt –Chassis No.MB1AYPCD3SERR7403–க்கு Rs.6,600/- ஆகியவற்றின் நகல் (4) KG Chavadi (Outgoing) Account Statement for C.SATHISH JAYACHANDRAN for the date 27-05-2025 (Generated on 28-05-2025

2:03AM) என்ற கணினி Print Out ஆகியவை திரு.C.சதீஷ் ஜெயசந்திரன் அவர்களிடம் சான்றொப்பமிடப்பட்டு விசாரணைக்காக பெறப்பட்டது. மேலும் இச்சோதனைச்சாவடியின் 5) வருகைப்பதிவேடு 2025 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் மற்றும் மே மாதத்தின் வருகை குறிப்பு பதிவு நகல், 6) பணியாளர்களின் தினசரி பணி பதிவேடு 2025 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதம் மற்றும் மே மாதத்திற்குண்டான பதிவுகளின் நகல் மற்றும் 7) நாள் 27.05.2025 ஆம் தேதிக்கான பணியாளர்களின் பணம் கையிருப்பு பதிவேடு பக்கம் 67, 68 மற்றும் 69-ன் நகல் மற்றும் 8) அலுவலக உதவியாளர் திரு.சம்பத் என்பவர் விசாரணைக்கு செல்லும் பொருட்டு சமர்பித்த மனு நகல்கள் ஆகியவற்றில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.சதீஷ் ஜெயசந்திரன் அவர்களால் சான்றொப்பமிடப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து திரு.C.சதீஷ் ஜெயசந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் திரு.G.லோகநாதன், உதவியாளர் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டது. அந்த சமயத்தில் சோதனைச்சாவடியில் காலை அலுவலுக்கு ஆஜரான திருமதி.M.ஈஸ்வரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத), திரு.K.முரளி, உதவியாளர் மற்றும் திரு.R.ராஜ்குமார், அலுவலக உதவியாளர் ஆகியோரிடம் சோதனைச்சாவடியில் நடந்த விபரங்களை கூறி, பொறுப்பினை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.C.சதீஷ் ஜெயசந்திரன், உதவியாளர் திரு.G.லோகநாதன் ஆகியோர் ஒப்படைக்க அனுமதிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 28.05.2025 காலை 08.00மணிக்கு பணிக்கு ஆஜரானவர்களை தொடந்து பணிபுரிய அறிவுறுத்தப்பட்டனர். மேலும் இந்த திடீர் தணிக்கையின் போது மொத்தம் ரூ.1,47,560/- கையூட்டு பெற்ற பணம் என்பதால் அந்த தொகையை செயல்முறை நடவடிக்கையின்போது கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனை சாவடியில் விசாரணைக்காக அமரவைக்கப்பட்டிருந்த நபர்களான 1). P.அப்துல் நிஷார், 2). திரு. R.அரவிந்த், 3). திரு.K.கருப்பையா, 4). K.மாதவன் ஆகியோர்களை நான் அவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அவர்கள்

வசம் வைத்திருந்த அவரவர் வாகனத்திற்குரிய ஆவணங்களின் நகல்கள் மற்றும் ஓட்டுநர் விபரங்கள் மட்டும் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனைச்சாவடி அலுவலர்களிடம் முத்திரை பெறுவதற்கு வைத்திருந்த பணத்தை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது கந்தே கவுண்டன் சோதனைச்சாவடியில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர், உதவியாளர், அலுவலக உதவியாளர், தனிநபர், வாகன ஓட்டுனர்கள் மற்றும் கிளீனர்கள் ஆகியோர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது அலுவலக கையிருப்பு பணம் முழுவதையும் காலை 08.00 மணிக்கு பகல்பணிக்காக ஆஜரான திருமதி.M.ஈஷ்வரி, மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பமல்லாத), திரு.K.முரளி, உதவியாளர் மற்றும் திரு.R.ராஜ்குமார், அலுவலக உதவியாளர் ஆகியோர்கள் சரி பார்த்து பெற்று கொண்டார்கள். சோதனை சாவடியில் பணிகள் வழக்கம் போல் நடைபெற அறிவுரை கொடுக்கப்பட்டு பணிகள் வழக்கம்போல் நடைபெற்றது. இந்த திடீர் சோதனையானது இன்று 28.05.2025-ம் தேதி 05.35 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 17.00 மணிக்கு முடிக்கப்பட்டு ஒரு நடவடிக்கை தயார் செய்யப்பட்டு அதில் அனைத்து விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,47,560/- மற்றும் இதர ஆவணங்கள் இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் இது சம்பந்தமாக 1) திரு.C.சதீஷ் ஜெயசந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர்(தொழில் நுட்பமல்லாத) மற்றும் 2) திரு.G.லோகநாதன், உதவியாளர் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,47,560/-, 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். (Sdxxxx) ஆய்வுக்குழு ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். Respected Madam, I have Received the complaint on 28.05.2025 at about 21.00hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.09/2025/AC/CB u/s. 7(a) of the Prevention of

Corruption Act, 1988 as amended in 2018 at about 21.30hrs (Sd.xxxxxx) D.ஷீலா, 28/05/2025 Inspr. V&AC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

28/05/25

(D.ஷீலா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.